## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC. 574/2022
Sessions)

( Prosecution P.W.1 - சித்ரா
Deposition of witness for (Defence
(Court

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

**Accused Present.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் என்பது அரசு சார்ந்த நிறுவனம் தான். அதற்கு உரிமையாளர் நிர்வாக இயக்கநர் ஆவார். எதிரி வேலை பார்க்கும் பணிமனையில் எந்தவொரு உற்பத்தியும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் இயந்திர பராமரிப்பும் கூட தொழிற்சாலை சட்டத்தில் வரும். தொழிற்சாலை சட்டம் பிரிவு 2(m)ல் தொழிற்சாலை என்பதற்கு வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. பிரிவு 2(k)ல் உற்பத்தி என்பதற்கு வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. படிவம் –II எங்கள் துறையினரால் அங்கீகரிக்கப்படுவது தான். படிவம் –IIல் Nature of Manufacturing Process என்ற இடம் காலியாக விடப்பட்டுள்ளது என்று சொன்னால் Maintanance of Passanger Transport Vehicles என்று கூறப்பட்டுள்ளது. Previous Year என்பதில் கோடு போடப்பட்டுள்ளது. நிர்வாக இயக்கநர் மீது நாங்கள் எந்த புகாரும் கொடுக்கவில்லை வழக்கும் தொடுக்கவில்லை. குற்றச்சாட்டு மேலாளர் சம்மந்தப்பட்டது என்பதால் எதிரி மீது மட்டும் வழக்கு தொடர்ந்துள்ளோம். குற்றச்சாட்டு நகலை நிர்வாக இயக்குநருக்கு அனுப்பவில்லை. அ.சா.ஆ.4 புகாரின் அடிப்படையில் தான் நான் ஆய்வு செய்தேன். பணியின் போது ஏற்படும் குறைபாடுகளுக்காக தற்காலிக பணிநீக்கம் மற்றும் absent என்று தான் கூறப்பட்டுள்ளது என்றால் அத்துடன் வார விடுப்பை ரத்து செய்வது மற்றும் ஈட்டிய விடுப்பில் கழிப்பது சம்மந்தமாகவும் கூறப்பட்டுள்ளது. பராமரிப்புத் தொழிலாளர்களுக்கு அவர்களது பணியின் போது ஏற்படும் பிரச்சனைகளுக்காக சட்டத்துறை மூலம் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பராமரிப்புத் தொழிலாளர்களுக்கு தற்காலிக வேலை நீக்க உத்தரவு வழங்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு சம்பளம், வேலை நீக்கம் மற்றும் குறைபாடுகளை தொழிலாளர் நீதிமன்றத்தில் தான் முறையிட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு உத்தரவிட எனக்கு எந்த அதிகாரமும் கிடையாது. நான் ஆய்வு செய்யும்போது கழிப்பறை இல்லை என்ற குற்றச்சாட்டு எதுவும் இல்லை. எனக்கு வந்த புகாரின் அடிப்படையில் ஆய்வு செய்தேன். என்னிடம் புகார் கொடுத்த வெள்ளைத்துரை என்பவர் CITU சங்கத்திற்கு

பொதுச்செயலாளர் என்ற முறையில் புகார் கொடுத்திருந்தார். புகார்தாரரோ அல்லது வேறு தொழிலாளியோ விடுப்புக் கடிதம் கொடுத்து விடுப்பு வழங்கவில்லை என்று காட்டுவதற்கு விடுப்பு கடிதம் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. யாரும் விடுப்பு விண்ணப்பம் சமர்ப்பிக்கவும் இல்லை. வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதை தான் ஈட்டியவிடுப்பில் கழித்துள்ளனர். விடுப்பு கேட்டு என்றால் தொழிலாளர் சட்டப்படி 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். தொழிலாளர்களுக்கு அன்றைய தினம் ஊதியத்துடன் கூடிய விடுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் விருதுநகர் அவர்களுக்கு ஒரு கடிதம் கொடுத்துள்ளார் என்றால் அது இந்த வழக்கிற்கு பின்னிட்டு 07.11.2023 ல் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதன் நகல் இணை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்குத் தெரியாது. என்னுடைய ஆய்வின் போது காணப்பட்ட குறைபாடுகள் எதுவும் உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. விடுப்பு வழங்குவதில் எதிரியோ, அவரது கழக நிர்வாகமோ சட்டத்திற்கு புறம்பாக செயல்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கைத் தாக்கல் செய்ய எனக்கு சட்டப்படியான அதிகாரமில்லை என்று சொன்னால் சரியல்ல. தொழிலாளர் சட்டப்படி தான் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும், அரசுத்துறையில் நடவடிக்கை எடுக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரி பணிபுரியும் நிறுவனம் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் வரக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**